**Kalanjiyam - International Journal of Tamil Studies**
Volume: 5 | Special Issue | December 2024 | eISSN: **2456-5148**

‘ களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

# காரைக்காலம்மையாரும் அக்கமாதேவியும் - ஒப்பீட்டு நோக்கு

## Karaikalamammaiyar and Akkamadevi - A Comparative Perspective

**பாரதி சா.**
***முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்***
***sbarathe90@gmail.com***
***8883827308***
BARATHE. S.
*Ph.D. Research Scholar*, ***Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur***
***sbarathe90@gmail.com***
***8883827308***

**Abstract:**

This article on the famous Tamil goddess Karaikalammaiyar and the famous Kannada goddess Akkamadevi, aims to highlight the similarities in their lives, such as their time environment, religious character, their tendency to renounce home, and their status as goddesses, and the similarities in their views that in their creations they call the ruler of the world, Lord Shiva, and Lord Shiva, ‘Pichadanan’, and also the differences between the two.

**Keywords**

Karaikalammaiyar, Punitavathi, Akkamadevi, Akka Mahadevi, Pichadanan, Pichadanamurthi, verse poems

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழில் புகழ்பெற்ற காரைக்காலம்மையார் மற்றும் கன்னடத்தில் அறியப்பெற்ற அக்கமாதேவி ஆகிய இருவரைப் பற்றிய இக்கட்டுரையானது, அவர்களின் காலச் சூழல், இறைப்பண்பு, இல்லறத்தை துறக்கும் போக்கு, பெண் தெய்வங்களாகப் போற்றப்படும் நிலை ஆகிய அவர்களின் வாழ்விலுள்ள ஒத்த கருத்துக்களையும், அவர் தம் படைப்புகளில் உலகை ஆள்பவன் இறைவன் எனவும், சிவபெருமான் ‘பிச்சாடனன்’ எனவும் இருவராலும்

KALANJIYAM

அழைக்கப்படும் ஒத்தக் கருத்துக்களையும், மேலும் இருவரும் வேறுபட்டு நிற்கும் இடங்களையும் எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### திறவுச் சொற்கள்

காரைக்காலம்மையார், புனிதவதி, அக்கமாதேவி, அக்கா மஹாதேவி, பிச்சாடனன், பிச்சாடணமூர்த்தி, வசன பாசுரங்கள்

### முன்னுரை

தமிழ் மொழியில் பெரியபுராணம் கூறும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் இசைப்பண்களோடு பாடல்களைப் பாடியவர் காரைக்காலம்மையார் ஆவார். இவருடையப் பதிக முறையைப் பின்பற்றியே தேவாரத் திருப்பதிகங்கள் பாடப்பட்டன. அம்மையாரே முதன்முதலில் தமிழ் மொழியில் பதிகம், அந்தாதி, இரட்டை மணிமாலை ஆகிய மூன்று இலக்கிய வடிவங்களைப் பாடியவராவார். பதிகங்களில் ‘திருக்கடைக்காப்பு’ பாடிய முதல்வரும் இவரே ஆவார். இவரைப் பின்பற்றியே தேவார மூவரும் பதிகத்தில் திருக்கடைக்காப்பினைப் பாடுகின்றனர். எனவே காரைக்காலம்மையாரைத் ‘தமிழகத்தின் பக்தி இயக்க முன்னோடி’ என அழைப்பது சாலச்சிறந்ததாகும்.

காரைக்காலம்மையாரைப் போலக் கன்னட மொழியில் பெண் தெய்வமாக வழிபடக்கூடியவர் அக்கமாதேவி எனும் பெண் ஞானியார் ஆவார். கன்னட மக்கள் இவரை ‘அற்புதத்திற்குள் அற்புதம்’, ‘தெய்வீக குயில்’ என்றெல்லாம் அழைக்கின்றனர். இவர் முக்தி எனும் சொல்லைக் குறிக்க ‘அறிவு’ எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். இறைவனுக்கு நிகராக வைத்துப் போற்றக்கூடியவராக இவர் திகழ்கிறார். இறைவன், இயற்கை, மாயை, அறிவு பற்றிப் பேசுவதாக இவரின் வசன கவிதைகள் அமைகின்றன. காரைக்காலம்மையார் மற்றும் அக்கமாதேவி ஆகிய இருவரின் வரலாற்று வழி வாழ்வினூடாக அமையும் ஒப்புமைகளையும், படைப்புகளினூடாக அமையும் ஒப்புமைகளையும், அதனோடு வேறுபட்டத் தன்மையினையும் ஆராய்ந்து அறிவதைக் கருதுகோளாகக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது.

#### வாழ்வினூடாகக் கால ஒப்பீடு

## 1. காலச் சூழல்

“சாக்கிய நாயனார், இடைக்காடர், காரைக்கால் அம்மையார் முதலான அடியார்களை எடுத்தோதியவாறு போல, அப்பர் திருஞானசம்பந்தர் சுந்தரர் முதலியோரை எடுத்தோதாத கல்லாடம் என்னும் அரிய செந்தமிழ் நூல் அம் மூவர்க்கும் முற்பட்டதாதல் துணியப்படுதலின், அஃது ஆறாம் நூற்றாண்டின் துவக்கத்திலாதல் ஐந்தாம் நூற்றாண்டின் ஈற்றிலாதல் இயற்றப்பட்டதாதல் வேண்டும்” என்கிறார். (மறைமலையடிகள், மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும், பக்: 240) இக்கூற்றுகளின் மூலம் காரைக்காலம்மையாரின் காலம் ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டாக இருக்கக்கூடும் என கருதப்படுகின்றது.

இவரே பக்தி இயக்க முன்னோடியாகக் கருத்தத்தக்கவர் ஆவார். இதற்குக் கருத்து சேர்க்கும் விதமாக “பக்தி இயக்கத்தின் வைகறைவிண்மீன் (Morning Star of the Bhakthi Movement) என்று அழைக்கப்பெறும் திருமூலரும், அற்புதத் திருவந்தாதி தந்த காரைக்காலம்மையாரும், சைவ சமயக்குரவர் நால்வரும் முன்னோடிகளாக இருந்து அன்னார்க்குப் பின் வந்த சைவர்க்கும் பிறசமயத்தார்க்கும் உயர்ந்த பக்திப்பனுவல்களைப் படைக்கத் தக்கவழி சமைத்துத் தந்தனர்” என்கிறார். (மருதநாயகம். ப., பக்தி இயக்கமும் தமிழ்க்கவிதை வளர்ச்சியும், பக்:78)

இவர் காரைக்கால் பகுதியில் பிறந்ததனால் காரைக்காலம்மையார் என இவ்வுலக மக்களால் அன்போடு அழைக்கப்படுகிறார். இறைவனை ஏற்றி இவர் பாடிய பிரபந்தங்களால் இவரின் காலம், பெண்கல்விக்கு முதன்மையளித்த காலமாகக் கருதப்படுகின்றது.

அக்கமாதேவி கர்நாடக மாநிலத்தில் உள்ள உடுத்தடி எனும் ஊரில் பிறந்த, பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வீர சைவ அடியாராவார். அக்காலத்தைச் சேர்ந்த பெண் கவிஞராக இவர் ஒருவரே நம்பப்படுகிறார். அதற்குக் காரணம் அவருடைய வசனங்கள் வடிவில் உள்ள கவிதைகள் ஆகும். மக்கள் இவர் மீது கொண்ட அன்பின் காரணத்தாலேயே ‘அக்கா’ எனவும் ‘அக்கா மஹாதேவி’ எனவும் அழைக்கப்படுகிறார்.

## 2. இறைப்பண்பு



KALANJIYAM

காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் புனிதவதியார் என்பதாகும். புனிதவதியார் இளம் வயதிலேயே சிவபெருமான் மீது பக்தியும், சிவனடியார்க்குத் தொண்டு செய்யும் பேருள்ளமும் பெற்றிருந்தார். காரைக்காலம்மையார் சிவபெருமானைத் தன் தந்தையாக எண்ணி வாழ்ந்தவர்.

இறைவன் அம்மையே! என்று அருளிச் செய்ய, அம்மையாரும் 'அப்பா' என்று தாமரை மலர் போன்ற அழகிய திருவடிகளில் விழுந்து எழுந்தார். என்பதை,

"அங்கணன் அம்மை யேஎன் றருள்செய அப்பா என்று
பங்கயச் செம்பொற் பாதம் பணிந்துவீழ்ந் தெழுந்தார்"

(பெரிய. காரைகாற். 59)

எனும் பாடலடிகள் இறைவனை அம்மையார் தந்தையாக எண்ணியதற்குச் சான்றாக நிற்கின்றன.

இவரைப் போலவே அக்கமாதேவியும் சிறு வயது முதலே ஸ்ரீசைலத்தை உறைவிடமாகக் கொண்ட, சென்ன மல்லிகார்ச்சுனனாகிய சிவபெருமான் மீது தீராக் காதல் கொண்டு வாழ்ந்தார். ஆண்டாள் திருமாலை எண்ணி வாழ்ந்தது போல, இவர் சிவபெருமானைத் தன் கணவனாக எண்ணி வாழ்ந்ததாக இவரைப் பற்றிய குறிப்புகளின் மூலம் அறியமுடிகிறது.

### 3. இல்லறத்தை துறத்தல்

கணவனாகிய பரமதத்தன் தன்னுடன் வாழ விரும்பவில்லை என்று அறிந்த கணமே காரைக்காலம்மையார் இறைவனை வேண்டித் தன் இளமையை உதறி விட்டு, பேயுருவினைப் பெற்றார்.

இவரைப் போல அக்கமாதேவியும் கட்டாயத்தின் பேரில் கௌசிகன் எனும் சிற்றரசனை மணந்தபோதும், திருமணமான சில காலத்திலேயே இருப்பிடத்தை விட்டு வெளியேறி இல்லறத்தைத் துறந்து, துறவு வாழ்வு வாழத்தலைபட்டார். இருவருமே இறைபக்தியின் மிக்காக இல்லறத்தைத் துறந்து இறைவனை நாடிச் செல்கின்றனர்.

இருப்பினும் காரைக்காலம்மையார் இறை போதனைகளை அளித்ததாகச் செய்திகள் இல்லை. ஆனால் அக்கமாதேவியார் அடியார்களிடத்தும், சாதாரண மக்களிடத்தும் இறை போதனைகளை வழங்கியதாகவும், தன்னை விட பெரிய ஞானியரிடத்தும், சான்றோர்களிடத்தும் விவாதம் செய்யும் வல்லமை பெற்றிருந்ததாகவும், உள்ளூர் 'அனுபவ மண்டபம்' எனுமிடத்தில்

மற்றவர்களோடு தத்துவ விசாரணை செய்பவராகவும் திகழ்ந்திருந்ததாக இவரைப் பற்றிய குறிப்புகளால் அறியலாகிறது. மேலும் இவர் சமரச வாழ்வு பற்றிய சிந்தனைகளையும் தன் வசன கவிதைகளில் உதிர்த்துச் செல்கிறார்.

**4. பெண் தெய்வங்களாகப் போற்றப்படும் நிலை**

காரைக்காலம்மையாரை வழிபடுவதற்கென தனித்த கோயில் ஒன்று காரைக்காலில் உள்ளது. அக்கோயிலில் புனிதவதியார் இளமை உருவில் வழிபடும் சிலை வடிவில் உள்ளார். அங்கு குரு பூசை நாள், பிரதோஷ நாள், போன்ற நாட்களில் பூசைகள் மற்றும் வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன. மாங்கனித் திருவிழா என்ற திருவிழாவும் அம்மையார் முக்தியடைந்த நாளன்று அவ்வூரில் கொண்டாடப்படுகிறது.

அக்கமாதேவியை வழிபடுவதற்கென அவர் பிறந்த கர்நாடக மாநிலத்தில் உள்ள உடுதடியில் கோயில் அமைக்கப்பெற்று வழிபாடு நடத்தப்பெறுகிறது. தமிழகத்தில் உள்ள ஒக்கலிகர் சமூகத்தினர் இவரை இன்றும் தங்கள் குலதெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

இன்றும் காரைக்காலம்மையாரும், அக்கமாதேவியாரும் வெவ்வேறு மாநில பகுதியில் பெண் தெய்வங்களாக வழிபடப்படுவது தாய்வழிச் சமூகத்தின் தனிச்சிறப்பான அடையாளமாகக் காணப்பெறுகின்றது.

**படைப்புகளினூடாகக் கால ஒப்பீடு**

காரைக்காலம்மையார் இறைவனாகிய சிவபெருமானை எண்ணி திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகங்கள், திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி என 143 பாடல்களைப் பாடியுள்ளார். இவை மூன்றுமே தமிழுக்குக் கிடைத்த புதிய இலக்கிய வடிவங்கள் ஆகும்.

இவரைப் போலவே அக்கமாதேவியும் 430 வசன பாஷை எனும் வசன கவிதைகளை இயற்றியுள்ளார். இக்கவிதைகள் இயற்கையின் அழகினையும், மாயை போன்ற நிலையாமைக் கருத்தினையும், இறைவன் சென்ன மல்லிகார்ச்சுனனின் பெருமைதனையும் எடுத்துரைப்பதாக உள்ளன.

KALANJIYAM

இருவரைப் பொறுத்தவரையில் காரைக்கால் அம்மையாரே யாப்பு இலக்கிய வடிவங்களைக் கற்றறிந்திருந்தார் என்பது, அவர் தன் திருவிரட்டை மணிமாலையில் கட்டளைக் கலித்துறை எனும் யாப்பு வடிவினை பயன்படுத்தியிருப்பதனைக் கொண்டு அறியலாம். அக்கமாதேவியாரின் வசன பாசுரங்கள் அவரின் வாயால் உதிர்க்கப்பட்டு நூலாக்கம் பெற்றவையாகும்.

**1. உலகை ஆள்பவன் இறைவன்**

ஈசனே அவன் அருளால் இவ்வுலகெலாம் ஆண்டு கொண்டு இருக்கின்றான். உயிர்களின் பிறப்பை எல்லாம் அறுப்பதும் அவன் அருள்தான். அதனால் அந்தத் திருவருள் என்னுள் நின்று உணர்த்தலால் எந்த பொருளின் உண்மை நிலையையும் காணும் முறையை நான் பெற்றுவிட்டேன். எனவே எனக்கு எப்பொழுதும் எப்பொருளுமாவது அவனது திருவருளே என்கிறார் காரைக்காலம்மையார். இதை,

“அருளே உலகெலாம் ஆள்விப்பது ஈசன்
அருளே பிறப்பறுப்ப தனால் – அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ தெனக்கு.”

(அற். திரு. 09)

என்ற அற்புதத் திருவந்தாதி பாடலடிகள் உணர்த்துகின்றன.

இந்த அகில உலகைச் சுழலச் செய்கின்ற சென்ன மல்லிக்கார்ஜுனரே! கோலை ஆட்டினால் குரங்கு ஆடுவது போலவும், பொம்மலாட்ட நூலின் முனையில் நகர்த்தப்படும் பொம்மை போலவும், நீ ஆடவைக்கின்ற படிதானே ஆடினேன். நீ என்னை வாழப் பணித்தபடி தானே வாழ்ந்தேன் என்கிறார். இதனை,

“கோல்மீது குரங்காக
நூல்முனையில் பாவையாக
நீ ஆட்டுவித்த படிதானே ஆடினேன்!
வாழ்வித்த படிதானே வாழ்ந்தேன்!

**Kalanjiyam - International Journal of Tamil Studies**
Volume: 5 | Special Issue | December 2024 | eISSN: **2456-5148**

உலகைச் செலுத்தும் சென்ன மல்லிகார்ஜுனா

நீ 'போதும்' என்று சொன்னவரை!"

(அக்கமாதேவி வசனங்கள் - மொழிபெயர்ப்பு)

என்ற அக்கமாதேவியின் வசன கவிதை வரிகள் பகர்கின்றன.

ஆக இருவருமே இறைவன் அருளால் தான் இவ்வுலகம் நன்முறையில் சுழல்வதும், உயிர்கள் வாழ்வதும் நிகழ்வதாகத் தம் கருத்தில் ஒன்றியிருகின்றனர்.

**2. பிச்சாடனன் - சிவபெருமான்**

ஒளிவீசும் உடம்பினை உடைய தேவர்களே! இளம்பிறையைத் தலையில் சூடிக் கொண்டு, கொஞ்சம் பிச்சைச் சோற்றுக்காக, ஊர்ஊராகத் திரிய வேண்டாம் என்று பெருமானிடம் மன்றாடி அவனைத் தடுக்க உங்களால் இயலவில்லை என்றால், பிறரால் அறிய முடியாத தானே தன்னை அறியவல்லானை, அடிமையாகிய என்னால் தடுக்க இயலுவது முடியாத காரியம் என்று காரைக்காலம்மையார் தனது அற்புதத் திருவந்தாதியில் பாடியுள்ளார். இதனை,

"திங்கள் இதுசூடிச் சில்பலிக்கென்று ஊர்திரியேல்

எங்கள் பெருமானே என்றிரந்து – பொங்கொளிய

வானோர் விலக்காரேல் யாம்வில்க்க வல்லமே

தானே யறிவான் தனக்கு."

(அற். திரு. 43)

இதைப் போலவே அக்கமாதேவியின் கனவில் சடைகளுடன் சைவக்குரவன் ஒருவன் தன் வீட்டிற்கு வந்ததாகவும், மீறிச் சென்றவனின் கைகளை அக்கமாதேவி பற்றியபோது அது பிச்சாடனன் உருவில் உள்ள மல்லிகார்ஜுனன் எனத் தான் அறிந்துகொண்டதாகக் கூறுகிறார். இதனை,

"அக்காகேள் அக்கா!

நான் ஒரு கனா கண்டேன்

அரிசியும் பாக்கும்

ஓலையும் தேங்காயும் கண்டேன்

**Kalanjiyam - International Journal of Tamil Studies**
Volume: 5 | Special Issue | December 2024 | eISSN: **2456-5148**

சின்னச் சின்ன சடைகளுடன்
சீரிய பல்வரிசையுடன் அழகிய சைவக்குரவன்
பிச்சைக்கு வீட்டுக்கு வரக் கண்டேன்
மிஞ்சி மீறிச் செல்பவனின் பின்சென்று கைப்பிடித்தேன்
அவன் சென்னமல்லிகார்ஜுனன் என்று கண்டு
கண்விழித்தேன்"

(அக்கமாதேவியின் வசனங்கள் – மொழிபெயர்ப்பு)

என்ற கவிதை வரிகள் உணர்த்துகின்றன. இக்கூற்றின் அடிப்படையில் சைவக்குரவர் அந்த சிவபெருமான் தான் என்று புலனாகின்றது.

'பிச்சாடனன்' என இறைவனை இருவரும் தம் படைப்பினில் ஒருமித்துக் கூறினாலும், வாய்மொழியாகக் கூறப்பெறும் காரைக்கால் அம்மையார் கதையில் அவரின் இல்லத்திற்கு சிவனடியாராக வந்தவர் 'பிச்சாடணமூர்த்தி' என்று அம்மக்களால் அழைக்கப்பெறும் சிவபெருமான் தான் என்பதற்குப் போதிய இலக்கியச் சான்றுகள் இல்லை. அது அம்மக்களின் வழக்காற்றையே நிறுவுவதாக அமைகின்றது.

## முடிவுரை

- இவ்வாறு வாழ்வின் பல்வேறு வாழ்கைச் சூழல் அடிப்படையிலும், படைப்புகளின் அடிப்படையிலும் காரைக்காலம்மையார் மற்றும் அக்கமாதேவி ஆகிய இருவரும் ஒப்புமைபடுத்தப் பெறுகின்றனர்.
- இருவரும் தம் வாழ்வை இறைவனுக்காகத் துறப்பினும், காரைக்காலம்மையார் இறைவனின் திருவடிகீழ் வீற்றிருக்கும் பெரும்பேறு பெற்றவராகவும், அக்கமாதேவியார் மக்களுக்கு பல்வேறு உபதேசங்களைக் கூறி, பின் இறைவனிடம் முக்தியுற்ற நிலையைப் பெற்றவராகவும் விளங்குகின்றார்.

- காரைக்காலம்மையாருக்கும் அக்கமாதேவிக்கும் பல ஒத்த தன்மையுடைய நிலைபாடுகள் இருப்பினும், அடிப்படையில் அவர்களுக்கான நிலவியல், சமூகவியல் பின்புலத்தில் சில வேறுபாடுகளும் கொண்டு விளங்குகின்றனர்.

**துணைநூற்பட்டியல்**

1. காரைக்காலம்மையார், அற்புதத் திருவந்தாதி (உரையுடன்), ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள், 1949.
2. சாந்தா.எம்.எஸ்., கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1997.
3. சுப்புலட்சுமி மோகன். செ., காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2010.
4. செல்வராசு. சிலம்பு. நா., காரைக்கால் அம்மையார் தொன்மம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில், 2023.
5. சேக்கிழார், பெரியபுராணம் (உரையுடன்), கோவைத் தமிழ்ச் சங்கம், கோயம்புத்தூர், 1954.
6. தமிழ்ச்செல்வி, மதுமிதா (மொழிபெயர்ப்பாளர்கள்), அக்கமாதேவி வசனங்கள், திரிசக்தி பதிப்பகம், சென்னை, 2010.
7. பெருந்தேவி (மொழிபெயர்ப்பாளர்), மூச்சே நறுமணமானால் (தமிழில்), காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில், 2021.
8. மருதநாயகம். ப., பக்தி இயக்கமும் தமிழ்க்கவிதை வளர்ச்சியும், இராசகுணா பதிப்பகம், சென்னை, 2021.
9. மறைமலையடிகள், மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2003.

KALANJIYAM

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.